உ

# அநுராதபுரம் அருள்மிகு கதிரேசன் ஆலய
# புனருத்தாரண மகா கும்பாபிஷேக
# நினைவுமலர்



255.32
அநுரா
SL-IPR

අනුරාධපුර කදිරේෂන් කෝවිලේ පුනරුත්ථාපන
මහා කුම්භාභිෂේක සමරු කලාපය
1980-04-28

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ಉ
ශිවමයම
තිරුච්චිට්ටම්බලම



J. J. Ramakrishnan
30. Fussels Lan
wellawat

உ

# அநுராதபுரம் அருள்மிகு கதிரேசன் ஆலய
# புனருத்தாரண மகா கும்பாபிஷேக
# நினைவுமலர்

உ.55.32
அநுரா.
SL/PR.

T. Kanagarathnam,
B.A(Lond.) Dip. Ed. S.L.(Cey) 1st Class Trained
Consultant: Kid. Editor - E. P. D. - E. & E. S
Lecturer; SLIDA and BCIS
COLOMBO — SRI LANKA.

24537

28. 04. 1980

சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்று உண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையகத் துள்ளார்க்கு வகுத்து வைத்தானே.

திருமூலர் திருமந்திரம்.

**வெளியீடு**

இலங்கைப் பிரதேச அபிவிருத்தி இந்து சமயத்
தமிழ் அலுவல் அமைச்சு, கொழும்பு.

1* — A 49219



## பொருளடக்கம்

1. விநாயகர் துதி .. .. .. 3
2. ஸ்ரீ கணேசபஞ்சரத்தினம் (தமிழாக்கம்) .. 5
3. கணேசபஞ்சரத்தினம் (சிங்களவாக்கம்) .. 13
4. அகஸ்தியரால் செய்யப்பட்ட ஸ்ரீ ஸ்காந்தத்திலுள்ள ஷடானனாஷ்டகம் (தமிழாக்கம்) .. .. 14
5. அகஸ்தியர் அருளிய ஸ்ரீ ஸ்காந்தத்திலுள்ள ஷடானனாஷ்டகம் (சிங்களவாக்கம்) .. .. 16
6. ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய ஸுப்ரஹ்மண்ய புஜங்கம் (தமிழாக்கம்) .. .. .. 17
7. ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய ஸுப்ரஹ்மண்ய புஜங்கம் (சிங்களவாக்கம்) .. .. .. 22
8. கோளறு பதிகம் — திருஞானசம்பந்தர் அருளியது .. 27
9. திருவாசகம் — எட்டாந்திருமுறை — மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம். .. .. 31
10. திருவிசைப்பா—ஒன்பதாந் திருமுறை—திருச்சிற்றம்பலம் திருமாளிகைத் தேவர் பாடியது. .. .. 32
11. திருப்பல்லாண்டு — சேந்தனார் .. .. 33
12. திருப்புராணம் — பன்னிரண்டாந் திருமுறை .. 34
13. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் .. .. 35
14. அநுராதபுரக் கதிரேசன் கோவில் பதிகம் .. 36
15. அநுராதபுரம் கதிரேசன் கோயில் வரலாறும், கும்பாபிஷேக விவரமும் .. .. 39

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

உச்சியின் மகுட மின்ன வொளிர்தரு நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள்கிம் புரிவ யங்க
மெய்ச்செவிக் கவரிதூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்ரக் கணபதிக் கன்பு செய்வாம்.

— கந்தபுராணம்

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.

— கந்தரநுபூதி

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியிலுறைபவ கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன் மற்பொரு திரள்புய
மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை மட்டவிழ் மலர்கொடு
பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில் முற்பட எழுதிய
முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம் அச்சது பொடிசெய்த
அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும் அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை அக்கண மணமருள் பெருமாளே.

— அருணகிரிநாதர் திருப்புகழ்

உ

சிவமயம்

# ஸ்ரீ கணேசபஞ்சரத்னம்

## 1. முதலாம் ஸ்லோகம்

முதா கராத்த மோதகம் ஸதா விமுக்தி சாதகம்
கலாதபாவதம்சகம் விலாசி லோக ரக்ஷகம் !
அநாயகைக நாயகம் விநாசிதேப தைத்யகம்
நதாசுபாசு நாசகம் நமாமி தம் விநாயகம் !!

### பதவுரை

மகிழ்ச்சியோடு கையிலேந்திய மோதகத்தினையுடையவரும் எப்பொழுதும் மோக்ஷத்திற்குச் சாதகமாக (கருவியாக உள்ளவரும்) சந்திரனை அணியாக உள்ளவரும் பந்த உலகத்தைக் காப்பவரும் தனக்கு மேலான ஒரு தலைவனில்லாத ஒரே தனிப் பெரும் தலைவரும் கஜமுகாசுரனை அழித்தவரும் தன்னை வணங்கியவர்களின் தீமைகளை விரைவில் அழிப்பவருமான அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த விநாயகப் பெருமானை வணங்குகிறேன்.

### தமிழ்ப்பா

"இன்புறவிக மோதகத்தை ஏந்தும் காத்தனை
என்றுமன்ப ருக்குமுத்தி சயுமா வுத்தனை
அன்புசாலும் அழகுமதியை அஞ்செவிக்கொ ளணியனை
அலகிலாத வுலகையிங்கு பாதுகாக்கும் ஐயனை
தன்னில்வேறு ஐயனில்த னிப்பெருந் தலைவனை
தாக்குமக்க யாசுரன்றன் வலியழித்த தலைவனை
மன்னுமன்பர் துயர்கெடுத்து மாண்பளிக்கும் மன்னனும்
மாவிநா யகப்பிரானை யான்வணங்கி வாழ்வனே.

### விரிவுரை

"அன்பர்களே! அடியார்களே! இங்கே வாருங்கள், இன்பம் இருக்கிறது, தருகிறேன், ஏற்றுக் கொள்ளுங்கள்" என்ற கருத்தோடு இடத் திருக்கரத்தால் மோதகத்தை ஏந்தி, அதனைத் துதிக் கரத்தினல் தொட்டுக் காட்டுகிருர் பிள்ளையார். அதாவது, பரிபக்குவம் வாய்ந்த ஆன்மாக்களுக்குப் பேரானந்த வாழ்வாகும் முத்திநிலையை அருளும் உறுதியுடன் அவர் அருள் நோக்கம் செய்கிருர். பூரண

சந்திரனைத் திருச்செவியிலே காதணியாகக் கொண்டு இதமான குளிர்ந்த காற்றை ஆன்மாக்களுக்கு அருளுகிறார். பரந்த இவ்வுலகிலே எவராயினும், பிள்ளையாரே எம்மைக் காத்தருள்வாய் எனத் தூய அன்புள்ளங் கொண்டு வணங்கினால் நிச்சயமாகக் காத்தருளுகின்றார். தனக்கு மேல் வேறு தெய்வமில்லை, தானே தனி முதல்வன் என்பதனால் விநாயகர் என்ற திருப்பெயரைத் தாங்கியுள்ளார். கயாசுர வடிவு கொண்டு ஆணவமலத்தின் வலிமையைக் கெடுத்து அடக்கி ஆகுவாக்கி (பெருச்சாளி வாகனமாக்கி) அதனை ஊர்ந்தருளுகிறார். அன்பு கொண்ட மெய்யன்பர் எவராயினும் தம்மை உறைக்க எண்ணுவாராயின் அவர்தம் துன்பங்களை நீக்கியருளுகிறார். இத்தகைய மாண்பு மிக்க விநாயகரைப் பிரானைத் தமியேன் வணங்கி வாழ்வடைவேனாக.

## 2. இரண்டாம் ஸ்லோகம்

நதேதராதி பீ கரம் நவோதிதார்க்க பாஸ்வரம்
நமத் சுராரி நிர்ஜரம் நதாதிகா பதுத்தரம் !
சுரேஸ்வரம் நிதீஸ்வரம் கஜேஸ்வரம் கணேஸ்வரம்
மஹேஸ்வரம் தம் ஆஸ்ரயே பராத் பரம் நிரந்தரம் !!

### பதவுரை

தன்னை வணங்காதவர்களுக்கு அதிக பயத்தையூட்டுபவரும் புதிதாகத் தோன்றிய சூரியன் (இளஞ்சூரியன்) போல் பிரகாசிப்பவரும் அசுரர்களாலும், தேவர்களாலும் வணங்கப்படுபவரும் வணங்கியவர்களைப் பெரும் ஆபத்திலிருந்து கைதூக்கி விடுபவரும் (காப்பவரும்) தேவர்களின் தலைவரும் செல்வத்திற்குத் தலைவரும் யானைகளின் தலைவரும் கணங்களின் தலைவரும் பெருங்கடவுளும் பரத்தைக் காட்டிலும் பெரியவரும் ஆன விநாயகரை எப்பொழுதும் (சரணமாக) அடைகிறேன்.

### தமிழ்ப்பா

"பத்தியோடு பணியிலாரை அச்சுறுத்தும் பரமனைப்
பரிதியங் குதிப்பதாகப் பரவியொளிரும் பாலனை
சித்திசேர் சுராசுரர்கள் வணங்கியேத்துஞ் சீலனைச்
சீர்பதத்தைப் பணியுநர்தம் அல்லல் தீர்க்கும் செம்மலை
உத்தமச் சுரர்பிரானை உலகுக்கருளும் நிதியனை
ஓங்குமக் கயப்பிரானை உயர்கணத்தின் தலைவனை
அத்தமா பரப்பிரானை அமைதியோங்க என்றுமே
ஆதியாம் பரம்பிரானை வணங்கியங்கடைவனே.



### விரிவுரை

எவர் பக்தியோடு, தம்மை முதலில் நினைந்து வணங்கவில்லையோ, அவர் எத்துணைப்பேராற்றல் வாய்ந்தவராயினும் அதனைச் சிதைத்து அவரை அச்சுறுத்தித் தம்மை வழிபடச் செய்து அருள்புரியும் பரம்பொருள் விநாயகரேயாவர். உதிக்கின்ற சூரியன் போல் எக்காலமும் ஒரே தன்மையாக ஒளிரும் திருமேனிப் பிரகாசம் உடையவர். தம்மை வணங்குபவர் தேவராயினும் அவர் தம் குலப்பகைவரான அசுரராயினும் தம் திருவுள்ளத்தில் அவர்களிடையே பேதங்கொள்ளாது அவர் தம் வழிபாட்டினை ஏற்றுத் திருக்கருணை பாலித்தருளும் வள்ளலுமானவர். தம் திருவடிகளையே தஞ்சம் என நம்பி வந்தடைந்த மெய்யன்பர்தம் இடையூறுகள் யாவற்றையும் நீக்கி அருள் புரியும் விக்கினேஸ்வரர் ஆவர். தேவாதி தேவராக விளங்குபவர் உலகினருக்கு வேண்டும் நிதிகள் எவையாயினும் அவற்றை வாரி வாரி வழங்கும், கொடைவள்ளலுமானவர். பிரணவம் எனப்படும் ஓங்காரத்தை எவரும் எப்போதும் நினைத்து தியானப் பொருளாக கொள்ள வேண்டுமென்ற திருவுளப் பாங்கினால் தாமே யானையின் திருமுகவடிவு கொண்டுள்ளவர். சிவகணங்களையெல்லாம் வழி நடத்தும் தலைமை பூண்டு விளங்குபவர், சிவபரம் பொருளை வணங்கி அடைந்து ஈடேறுவேனாக.

## 3. மூன்றாம் ஸ்லோகம்

ஸமஸ்த லோக சங்கரம் நிரஸ்த தைத்ய குஞ்சரம்
தரேதரோதரம் வரம் வரேப வக்த்ரம் அக்ஷரம் !
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யசஸ்கரம்
மனஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம் !!

### பதவுரை

எல்லாவுலகத்திற்கும் (உயிர்களுக்கும்) நன்மையைச் செய்பவரும் கஜமுகாசுரனை அழித்தவரும் மிகப் பெரிய வயிற்றினையுடையவரும், சிறந்தவரும சிறந்த யானையின் முகத்தினையுடையவரும் அழிவற்றவரும் அருள்பாலிப்பவரும் பொறுமையைத் தருபவரும் மகிழ்ச்சியைக் கொடுப்பவரும் புகழைக் கொடுப்பவரும் தன்னை வழங்கியவர்களுக்கு நல்ல மனத்தைத் தருபவரும் பிரகாசிப்பவருமான விநாயகரை வணங்குகிறேன்.



1**—A49219

### தமிழ்ப்பா

" அகிலலோக உயிர்களுக்கும் அமைதியின்ப நல்குவான்
  ஆனைமுகத் தசுரனுக்கும் அருமறன் அருளானன்
அகிலமேவு மேன்மையாளன் ஆனபெருந் தொந்தியான்
  ஆனைமுகத் தருளினன் அழிவிலாத அண்ணலான்
நிகிலவருளின் நீர்மையாளன் நீண்டபொறுமை நல்குவான்
  நெறிப்படுத்து மின்பினன் நெடும்புகழின் மல்குவான்
மூகிழ் மனத்தி லெண்ணுவார்க்கு மூதுணர்வை அருளுவான்
  மூத்தவொளியி னோங்குவானை முன்துதித்து வாழ்வனே

### விரிவுரை

பரம்பொருளாம் இறைவனுக்கு அகில உயிர்களும் சமமேயாவர். சாதியம், இனம், மத, மொழி, சாதி என்ற பேத உணர்வு இறைவன் இடத்தே இல்லை. ஆன்மாக்களுடைய பரிபக்குவ நிலைகண்டு அவைகளுக்கு நிலைபெறுன பேரின்ப சுகத்தைத் அருளுபவர் முழுமுதற் கடவுளாகும் விநாயகப் பெருமான் ஆவர். அவர் அருளும் கருணை யானது அறக்கருணை என்றும் மறக்கருணை என்றும் இருவகைப் படும். ஒழுக்க முறையை மீறி நடப்பவர்களை இறைவன் கண்டித்து அவர்களை நல்வழிப்படுத்துதலே இறைவன் செய்யும் மறக்கருணையாம். கயமுகாசுரனுக்கு விநாயகப் பெருமான் கருணை புரிந்தமையாலன்றோ அவன் எக்காலமும் அப்பெருமானைச் சுமக்கின்ற பெரும் பதவியைப் பெற்றான். அகில பிரபஞ்சத்தையும் தமது பரமேசுவரத் திருக் கோலத்தில் அடக்கியமையாலன்றோ விநாயகப் பிரானுக்குப் பெரிய வயிறு அமைவதாயிற்று. அதனால் அப்பெருமான் மிக மேலாந் தன்மை கொண்டவர். அருள் நிரம்பிய யானைமுகம் கொண்டவர். ஒருபோதும் அழிவென்பதே இல்லாதவர்—அதனால், என்றும் நிலை பெறுக விளங்குபவர். கருணைக்கு இருப்பிடமானவர். பொறுமை என்னும் பெருங்குணம் பூண்டு ஆன்மகோடிகளுக்கு அக்குணத்தைப் புகட்டுபவர். பேரின்ப நெறியிலே யாவரையும் வழிப்படுத்துபவர். எவ்வாறும், என்றும் புகழ்ந்து போற்றப்படுவர். ஒன்றிய மனத்தி னால் தியானிப்பவருக்கு ஞானத்தை அருளுபவர், சோதிமயமான அப்பெருமானை முதலில் துதித்து வணங்கி வாழ்வை அடைவேனாக.

4. நான்காம் ஸ்லோகம்—

அகிஞ்சனார்த்தி மார்ஜநம் சிரந்தனோக்தி பாஜநம்
புராரி பூர்வ நந்தநம் சுராரி கர்வ சர்வணம் !
ப்ரபஞ்ச நாச பீஷணம் தநஞ்ஜயாதி பூஷணம்
கபோல தாந வாரணம் பஜே புராண வாரணம் !!



### பதவுரை

பரம ஏழைகளின் துயரைத் துடைப்பவரும், பழைமையான (புராண) பேச்சுக்கு இருப்பிடமானவரும் (பழம் பொருளுக்குப் பழம் பொரு ளானவரும்) திரிபுராசுரர்களின் எதிரியான சிவபெருமானின் முதற் குமாரனும், தேவர்களின் விரோதியான அசுரர்களின் கர் வத்தையடக்கியவரும், பிரளயகாலத்தைக் காட்டிலும் பயங்கரமான வரும், உலகங்கள் அழிக்கப்படும் ஊழிக்காலத்தில் பயங்கரமான கோலங் கொள்பவரும், தனஞ்சயன் முதலிய சர்ப்பங்களை ஆபரண மாக உடையவரும், கன்னப் பிரதேசங்களில் பெருகும் மதநீரினா லேயே தீமைகளை நீக்குபவருமான ஆதி யானையை (விநாயகரை) வணங்குகிறேன்.

### தமிழ்ப்பா

" பரம ஏழை பங்கனுகிப் பரவுதுன்பம் போக்குவான்
  பழமையான வற்றினுள்ளே பழமையாகி மேவுவான்
புரமெரித்த புங்கவனுர் போற்றுமுதற் பிள்ளையான்
  போற்றுசுரர் பகையசுரர் பயிலகந்தை போக்குவான்
பிரளயப்ப யங்கரத்திற் பெரிதுபயன் பண்ணுவான்
  போர்தனஞ் சயன்முதலாம் பேரரவப் பூணினன்
விரவுகன்ன மூலமல்கு விரிமதப் பெருக்கினன்
  வேதவாதி யானையானை விதிவணங்கி வாழ்வேனே.

### விரிவுரை

மிகமிக இலகுவானது பிள்ளையார் பூஜை. பெரும்பயனைத் தருவது பிள்ளையார் பூஜை எந்த ஏழையானாலும் தெய்வ நம்பிக்கை உடைய வனுயின் எந்த நற்கருமம் செய்யத் தொடங்கும் போதும் விநாயக வழிபாடு செய்தே தொடங்குவான். அதனால், அவனது துன்ப மெல்லாம் நீங்க, எடுத்த கருமத்தை இனிது நிறைவேற்றுவார் அப்பெருமான். பழைமையான புராணங்களிலெல்லாம் எடுத்து வியந்து பாராட்டப்படும் தெய்வம் விநாயகப் பெருமானுவர். ஆண வம், கன்மம், மாயை என்னும் மும் மலங்களும் முப்புர அவுணர் களாக உருவகம் செய்யப்பட்டன. அவற்றை அழித்த சிவபரம் பொருள் திரிபுராந்தகர். அவர் கொண்ட அருள் மூர்த்தமே மூத்த பிள்ளையாராவர். அவரே சித்தி விநாயகர். விநாயகப் பெருமானை எதிர்த்த அசுரர் கொண்ட அகங்காரத்தை அழித்தவர் அப்பெருமான். அவர் அருள் மூர்த்தியாதலினாலே தம்மை வணங்காரிடத்தே பிரளய காலருத்திரரைப் போலப் பெரிய அச்சத்தை விளைவித்து அவர்களை

நல்வழிப்படுத்துவார். தனஞ்சயன் முதலாகச் சொல்லப்படும் பாம்புகளை அணிகளாக அணிந்துள்ளார். அறிவு, இச்சை, தொழில் எனப்படும் சத்திகளின் பெருக்கமே தமது மத நீர்ப் பெருக்காகக் கொண்டுள்ளவர். ஆதிக்கும் ஆதியாகவுள்ள யானைமுகப் பெருமானை முறைப்படி வணங்கி வாழ்வேனாக.

### 5. ஐந்தாம் ஸ்லோகம்

நிதாந்த காந்த தந்த காந்திம் அந்தகாந்தகாத் மஜம்
தவசிந்த்ய ரூபம் அந்தஹீநம் அந்தராயக்ருந்தநம் !
ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்த மேவ யோகிநாம்
தம் ஏகதந்தம் அத்புதம் விசிந்தயாமி ஸந்ததம் !!

**பதவுரை**

மிகக் கவர்ச்சிகரமான தந்தங்களின் ஒளியை உடையவரும். யமனுக்கு யமனானவரின் (முடிவைச் செய்த) சிவனின் புத்திரரும் (மனதினால்) நினைக்க முடியாத (பெருமைவாய்ந்த) உருவத்தையுடைய வரும், முடிவற்றவரும், இடையூறுகளை யழிப்பவரும் (வெட்டு பவரும்) யோகிகளின் இதயத்தின் கண் எப்பொழுதும் வசிப்ப வரும், அற்புதமானவருமான, அப்படிப்பட்ட ஒரு தந்தத்தினையுடைய விநாயகப் பெருமானை எப்பொழுதும் நினைக்கின்றேன்.

**தமிழ்ப்பா**

" அந்தமின்றி யொளிருமந்த அழகுதந்த முதல்வனை
அந்தகற்கு மந்தநல்கும் அந்தகனுர் புதல்வனை
முந்துமுன்ன முன்னடங்கா மூதருளின் உருவனை
மூண்டவிடை யூறழிக்கும் முன்னவனை முடிவிலான்
சிந்தனைகொள் யோகியர்தம் சிரிதயத் தெய்தியே
செம்மையருள் வாழ்வுறவே ஒங்குமுதற் சீரினை
உந்துமற்பு தத்தினனை ஒளிருமேக தந்தனை
உள்ளமொன்ற என்றுமே உறவணங்கி வாழ்வனே

**விரிவுரை**

சிவமும் சிவசத்தியும் ஒன்றுபட்டதாகிய அர்த்தநாரீசுவரத் திருக் கோலமே தமது யானைமுகத் திருத்தோற்றம் என்பதைக் குறிப்பது போல ஒற்றைத் தந்தம் ஒளிருகின்றது. யமனுக்குயமனாக அமைந்து யமனது அகந்தையைக் கெடுத்து அறிவுறுத்திய சிவபரம்



பொருளின் முதல் திருக்குமாரனுக உள்ளவர் விநாயகப்பெருமான். மகாஞாபிகளுடைய தியானத்துக்கும் அடங்காத அருட்பெருவடி வத்தை உடையவர், இடையூறுகளை வேரோடு அழிப்பவர், எல்லை யற்றவர், யோகிகளின் இதயத்தில் என்றும் விளங்குபவர், அற்புத மான திருத்தோற்றமுடையவர். இத்துணைச் சிறப்புக்கள் சொல்லி யும் அடங்காத பெருமையுடைய பிள்ளையாரை எப்பொழுதும் நினைந்து வணங்கி வாழ்வடைவேனாக.

### 6. ஆறும் ஸ்லோகம்

மஹா கணேச பஞ்சரத்னம் ஆத்ரேண யோ நீவஹம்
ப்ரஜல்பதி ப்ரபாதகே ஹ்ருதி ஸ்மரன் கணேஸ்வரம் !
அரோகதாம் அதோஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹிதாயுர் அஷ்டபூதிம் அப்யுபைதிஸோ சிராத் !!

**பதிவுரை**

எவன் ஒவ்வொரு நாளும் காலையில் விநாயகரை மனதில் நினைத் துக் கொண்டு ஆதரவுடன் கணேசப் பெருமானின் பஞ்சரத்தினத்தை சொல்லுகிருனே அவன், வியாதியின்மையையும், குற்றமின்மையை யும், நல்ல நிலையையும் (ஒற்றுமையையும் நற்புதல்வனையும் (வேதத் தில்) விதிக்கப்பட்ட ஆயுளையும் எட்டுவகையான ஐஸ்வரியத்தையும் விரைவில் அடைவான். அணிமா, மஹிமா, கரிமா, லகிமா, ப்ராப்தி, ப்ரா காம்யம், ஈசத்வம், வசித்வம் என்னும் அஷ்ட ஐஸ்விரியங்கள்).

**தமிழ்ப்பா**

" மாகணேச பஞ்சரத்னம் மன்னுமித் துதிகளை
மனவிருப்பி னுடைவரை மாண்புகொண்டு நாடொறும்
மாகணேச வெம்பிரானை மனத்திலே இருத்தியே
வாழுமதி காலைதன்னில் வாக்கினல் வழுத்தினல்
ஆகநோய்க ளின்மையும் ஆகுதோஷ மின்மையும்
அமைதியான வாழ்வினேடு அருமைமகப் பேற்றையும்
போகமோடு புனிதஆயுள் பொலியுமட்ட சித்தியும்
புண்ணியமா விரைவினெய்திப் போக்கியத்து வாழ்வரே.

**பதவுரை**

பெருமைவாய்ந்த பிள்ளையாரைக் குறித்த இந்த ஐந்து மணிகளான துதிகளையும் எவராக இருந்தாலும் மனத்திலே எழுகின்ற தூய்மையான விருப்பத்துடன் விநாயகப் பெருமானது திருத்தோற்றத்தை தியானித்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் அதிகாலை நேரத்தில் வாக்கினாலே சொல்லித் துதிக்குக. அப்படிச் செய்து வருவீராயின் நிச்சயமாக உங்கள் உடம்பிலே எந்தவித நோய்களும் வரமாட்டா ; எந்த விதமான குற்றங்களும் உங்களை வந்தடையமாட்டா ; அமைதியான வாழ்வைப் பெறலாம் ; அருமை வாய்ந்த மகப்பேற்றை அடையலாம் ; போக போக்கியங்களை அனுபவிக்கலாம் ; நீண்ட ஆயுளைப் பெறலாம் ; அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாம்மியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அட்டமாசித்திகளையுமே பெறலாம். இக வாழ்வும் பரவாழ்வும் விநாயகப் பிரான் அருளினால் சித்திக்கும்.



## ගණේශ පඤ්චරත්නය

1. මුදා කරාත්ත මෝදකම් සදා විමුක්ති සාධකම්
කලාධරා වදංසකම් විලාසි ලෝක රක්ෂකම්
අනායකෛක නායකම්, විනාසිතේප දෛත්‍යකම්
නදාශුභාශු නාසකම් නමාමි තම් විනායකම් (II)

2. නතේතරාදි භී කරම් නවෝදිතාර්ක භාෂ්කරම්
නමත් සුරාරි නිර්ජරම් නතාදිකා පදුත්තරම් (I)
සුරේෂ්වරම් නිධීශ්වරම් ගජේශ්වරම් ගණේශ්වරම්,
මහේශ්වරම් තමාශ්‍රයේ පරාත් පරම් නිරන්තරම් (II)

3. සමස්ත ලෝක ශංකරම් නිරස්ත දෛත්‍ය කුඤ්ජරම්
තරේ තරෝදරම් වරම් වරේප වක්ත්‍ර මක්ෂරම් (I)
කෘපාකරම් ක්ෂමාකරම් මුදාකරම් යසස්කරම්
මනස්කරම් නමස්කෘතාම් නමස්කරෝමි භාෂ්වරම්.

4. අකිඤ්චනාර්ති මාර්ජනම් සිරන්ද තෝක්ති භාජනම්
පුරාරි පූර්ව නන්දනම් සුරාරි ගර්ව සර්වනම් (I)
ප්‍රපඤ්ච නාස භීෂණම් ධනඤ්ජයාදි භූෂණම්
කපෝල දාන වාරණම් භජේ පුරාණවාරණම් (II)

5. නිතාන්ත කාන්ත දන්ත කාන්ති මන්තකාන්ත කාත්මජම්
අචින්ත්‍ය රූප මන්ද හීනම් අන්තරායකෘන්තනම් (I)
හෘදන්තරේ නිරන්තරම් වසන්තමේව යෝගිනාම් (I)
තමේක දන්ත වන්පුදම් විචින්තයාමි සන්තතම් (II)

6. මහා ගණේශ පඤ්චරත්න මාදරේන යෝන්වහම්
ප්‍රජල්පති ප්‍රභාතකේ හෘදිස්මරන් ගණේශ්වරම් (I)
අරෝගතාම් අදෝෂතාම් සුසාහිතීම් සුපුත්‍රතාම්
සමාහිතායුර් අෂ්ට භූතිම් අභ්‍යුපෛති සෝසිරාත් (II)

அகத்தியரால் செய்யப்பட்ட

## ஸ்ரீ ஸ்காந்தத்திலுள்ள ஷடானனாஷ்டகம்

நமோஸ்து ப்ருந்தாரக ப்ருந்த வந்த்ய
   பாதாரவிந்தாய ஸுதாகராய!
ஷடானனாயாமித விக்ரமாய
   கௌரீ ஹ்ருதானந்த ஸமுத் பவாய!! 1

நமோஸ்து துப்யம் ப்ரணதார்த்தி ஹந்த்ரே
   கர்த்ரே ஸமஸ்தஸ்ய மனோ ரதானாம்!
தாத்ரே ரதானாம் பரதாரகஸ்ய
   ஹந்த்ரே ப்ரசண்டாஸுர தாரகஸ்ய!! 2

அமூர்த்த மூர்த்தாய ஸஹஸ்ரமூர்த்தயே
   குணாய குண்யாய பராத்பராய!
அபார பாராய பரா பராய!
   நமோஸ்து துப்யம் சிகிவாஹனாய!! 3

நமோஸ்து தே ப்ரம்மவிதாம் வராய
   திகம்பராயாம்பர ஸமஸ்திதாய!
ஹிரண்ய வர்ணாய ஹிரண்ய பாஹவே
   நமோ ஹிரண்யாய ஹிரண்ய ரேதஸே!! 4

தபஸ் ஸ்வரூபாய தபோத நாய
   தபப் பலானாம் ப்ரதிபாதகாய!
ஸதா குமாராய ஹி மாரமாரிணே
   த்ருணிக்ருதைச் வர்ய விராகிணே நம:!! 5

நமோஸ்து துப்யம் சரஜன்மனே விபோ
   ப்ரபாத ஸூர்யாருண தந்தபங்க்தயே!
பாலாய சாபால பராக்ரமாய
   ஷாண்மாது ராயால மநாதுராய!! 6



மீடுஷ்டமாயோத்தர மீடுஷே நமோ
   நமோ கணானாம் பதயே கணாய
நமோஸ்து தே ஜன்ம ஜராதிகாய
   நமோ விசாகாய ஸு சக்திபாணயே 1

ஸர்வஸ்ய நாதஸ்ய குமாரகாய
   க்ரௌஞ்சாரயே தாரக மாரகாய
ஸ்வாஹேய காங்கேய ச கார்த்திகேய
   சைலேய துப்யம் ஸததம் நமோஸ்து 8

T. Kanagarathnam,
B.A(Lond.) Dip-in-Ed.(Cey) 1st Class Trained
Consultant: Rtd. Editor - E. P. D. [illegible]
Lecturer; SLIDA and BCIS
COLOMBO — SRI LANKA.



1***—A49219

අගස්ති මහාර්ෂි විසින් රචිත

## “ශ්‍රී ස්කාන්දම්” හි අඩංගු ෂඩානනාෂ්ටකම්

1. නමෝස්තු වෘන්දාරක පෘන්ද වන්ද්‍ය
පාතාර ලින්ධාය සුධාකරාය/
ෂඩානනායාමිධ වික්‍රමාය
ගෞරී හෘදානන්ද සමුද්භවාය//

2. නමෝස්තු තුභ්‍යම් ප්‍රනදාර්ත්ති හන්ත්‍රෙ
කර්ත්‍රෙ සමස්තස්‍ය මනොරථානාම්/
තාත්‍රෙ රතානාම් පරිවාරකස්‍ය
භෙත්‍රෙ ප්‍රචන්ඩාසුර තාරකස්‍ය//

3. අමෘත මූර්තාය සහස්‍ර මූර්තයේ/
ගුණාය ගුණ්‍යාය පරාත්පරාය//
නමෝස්තු තුභ්‍යම් ශිඛිවාහනාය.

4. නමෝස්තු තෙ බ්‍රහ්මවිතාමරාය
කිවම්බරා රාම්බර සම්ස්තිතාය/
හිරණ්‍ය වර්ණාය හිරණ්‍ය පාහමෙ
නමෝ හිරණ්‍යාය හිණ්‍යරේ දසේ.//

5. තපස් ස්වරූපාය තපෝධරාය
තපස් ඵලානාම් ප්‍රතිපාදකාය/
සදා කුමාරාය හි මාරලාරිනේ
තෘණීකෘරුදෙශ්වර්ය විරාගිනෝ නම//

6. නමෝස්තු තුභ්‍යම් සරජන්මනෝ විපෝ
ප්‍රපාද සූර්යාරුණ තන්ද පඩ්ක්ත යේ/
බාලාය සාපාල පරාක්‍රමාය
ෂාන්මාධු රායාල මනාතුරාය.//

7. මී දූෂ්ටමායෝත්තර මිධුයේ නමෝ
නමෝ ෂනානාම් පදමෙ කනායි/
නමෝස්තු තෙ ජන්ම ජරාධිකාය
නමෝ විසාකාය සු ශක්තිපාතයේ.//

8. සර්වස්‍ය කානස්‍ය කුමාරකාය
ක්‍රෞඤ්ජරාය තාරක මාරකාය/
ස්වාහේය කාඩ්ගේය ස කාර්තිකේය
ශෛලේය තුභ්‍යම් සතතම් නමෝස්තු.//



ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

## ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்

ஸதா பாலரூபாபி விக்னாத்ரிஹந்த்ரீ
மஹாதந்திவக்த்ராபி பஞ்சாஸ்யமான்யா/
விதீந்த்ராதிம்ருக்யா கணேசாபிதாமே
விதத்தாம் ச்ரியம் காபி கல்யாணமூர்த்தி// 1

ந ஜானாமி சப்தம் ந ஜானாமி சார்த்தம்
ந ஜானாமி பத்யம் ந ஜானாமி கத்யம்/
சிதேகா ஷடாஸ்யா ஹ்ருதி த்யோததே மே
முகாந்நிஸ்ஸரந்தே கிரஸ்சாபி சித்ரம்// 2

மயூராதிரூடம் மஹாவாக்ய கூடம்
மனோஹாரிதேஹம் மஹத்சித்த கேஹம்/
மஹீதேவதேவம் மஹாவேத பாவம்
மஹாதேவ பாலம் பஜே லோக பாலம்// 3

யதா ஸந்நிதானம் கதா மானவாமே
பவாம் போதிபாரம் கதாஸ்தே ததைவ/
இதி வ்யஞ்ஜயந்ஸிந்துதீரே ய ஆஸ்தே
தமீடே பவித்ரம் பராசக்தி புத்ரம்// 4

யதாப்தேஸ்தரங்கா லயம் யாந்திதுங்கா :
ததைவாபத : ஸந்நிதௌ ஸேவதாம் மே/
இதிவோர்மிபங்க்தீர் ந்ருணாம் தர்சயந்தம்
ஸதா பாவயே ஹ்ருத்ஸரோஜே குஹம் தம்// 5

கிரௌ மந்திவாஸே நரா யேதிரூடா
ததா பர்வதே ராஜதே தேதிரூடா :/
இதீவப்ருவன் கந்தசைலாதிரூட
ஸதேவோ முதேமேஸதா ஷண்முகோஸ்து// 6

மஹாம் போதிதீரே மஹாபாபசோரே
முனீந்த்ரானு கூலே ஸுகந்தாக்யசைலே/
குஹாயாம் வஸந்தம் ஸ்வபாஸா லஸந்தம்
ஜனார்திம் ஹரந்தம் ச்ரயாமோ குஹம் தம்// 7

ஸஸத்வர்ணகேஹே நருணம் காமதோஹே
ஸுமஸ்தோ மஸஞ்ச்சன்ன மாணிக்ய மஞ்சே|
ஸமுத்யத் ஸஹஸ்ரார்க துல்ய ப்ரகாசம்
ஸதாபாவயே கார்த்திகேயம் ஸுரேசம்|| 8

ரணத்தம்ஸகே மஞ்சுளேத்யந்த சோணே
மனோஹாரி லாவண்ய பீயூஷபூர்ணே|
மனஷ்ஷட்பதோ மே பவக்லேசதப்த :
ஸதா மோததாம் ஸ்கந்த தே பாதபத்மே|| 9

ஸுவர்ணாபதிவ்யாம்பரைர் பாஸமானும்
க்வணத்கிங்கிணீ மேகலா சோபமானும்|
ஸஸத்தேம பட்டேன வித்யோதமானும்
கடிம் பாவயே ஸ்கந்த தே தீப்யமானும்|| 10

புலிந்தேசகன்யாக நாபோக துங்க
ஸ்தனுலிங்க நாஸக்த காச்மீரராகம்|
நமஸ்யாம்யஹம் தாரகாரே தவோர :
ஸ்வபக்தாவனே ஸர்வதா ஸாநுராகம்|| 11

விதெள க்லுப்ததண்டான் ஸ்வலீலாத்ருதாண்டாந்
நிரஸ்தே பசுண்டாந் த்விஷத்காலதண்டான் |
ஹதேந்த்ராரிஷண்டாஞ் ஜகத்ராண சௌண்டான்
ஸதாதே ப்ரசண்டாஞ் ச்ரயே பாஹுதண்டான்|| 12

ஸதா சாரதா : ஷண்ம்ருகாங்கா யதி ஸ்யு :
ஸமுத்யந்த எவ ஸ்திதாச்சைத் ஸமந்தாத்|
ஸதா பூர்ணபிம்பா : கலங்கைஸ்ச ஹீனு :
ததா த்வன்முகானும் ப்ருவே ஸ்கந்தஸாம்யம்|| 13

ஸ்புரன்மந்தஹாஸை : ஸஹம்ஸானி சஞ்சத்
கடாக்ஷாவலீப்ருங்க ஸம்தோ ஜ்ஜ்வலானி|
ஸுதாஸ்யந்தி பிம்பாதராணீ சஸூனே
தவாலோகயே ஷண்முகாம் போருஹாணி|| 14



விசாலேஷு கர்ணாந்த தீர்க்கேஷு வஜஸ்ரம்
தயாஸ்யந்திஷு த்வாதசஸ் வீக்ஷணேஷு|
மயீஷத் கடாக்ஷ : ஸக்ருத் பாதிதச்சேத்
பவேத்தே தயாசீல கா நாமஹானி : || 15

ஸுதாங்கோத் பவோ மேஸி ஜீவேதி ஷட்தா
ஜபன்மந்த்ரமீச: முதா ஜிக்ரதே யான் |
ஜகத்பாரப்ருத்பயோ ஜகந்நாத தேப்ய :
கிரீடோஜ்ஜ்வலேப்யோ நமோ மஸ்தகேப்ய :|| 16

இஹாயாஹி வத்ஸேதி ஹஸ்தான் ப்ரஸார்யா
ஹ்வயத்யாதராச்சங்கரே மாதுரங்காத் |
ஸமுத்பத்ய தாதம் ச்ரயந்தம் குமாரம்
ஹராச்லிஷ்டகாத்ரம் பஜே பாலமூர்த்திம் || 17

ஸ்புரத்ரத்ன கேயூரஹாராபிராம—
ச்சலத் குண்டல ச்ரீலஸத் கண்டபாக : |
கடௌ பீதவாஸா : கரே சாருசக்தி :
ஸ்புரஸ்தான் மமாஸ்தாம் புராரேஸ்தனூஜ :|| 18

குமாரே சஸூனோ குஹ ஸ்கந்த ஸேனா—
பதே சக்திபாணே மயூராதிரூட |
புலிந்தாத் மஜாகாந்த பக்தார்த் திஹாரின்
ப்ரபோ தாரகாரே ஸதாரக்ஷமாம் த்வம் || 19

ப்ரசாந் தேந்த்ரியே நஷ்டஸம்க்ஞே விசேஷ்டே
கபோத்காரி வக்த்ரே பயோத்கம் பிகாத்ரே |
ப்ரயாணோன்முகே மய்யநாதே ததானீம்
த்ருதம் மே தயாளோ பவாக்ரே குஹத்வம் || 20

க்ருதாந்தஸ்ய தூதேஷு சண்டேஷு கோபா
த்தஹச்சிந்தி பிந்தீதி மாம் தர்ஜயத்ஸு |
மயூரம் ஸமாருஹ்ய மா பைரிதி த்வம்
புர : சக்திபாணிர் மமாயாஹி சீக்ரம் || 21

ப்ரணம்யா ஸக்ருத் பாதயோஸ்தே பதித்வா
ப்ரஸாத்ய ப்ரபோ ப்ரார்த்தயேனேக வாரம் |
நவக்தும் க்ஷமோஹம் ததானீம் க்ருபாப்தே
நகார்யாந்தகாலே மனாகப் யுபேக்ஷா || 22

ஸஹஸ்ராண்ட போக்தா த்வயா ஸுரநாமா
ஹதஸ்தாரக : ஸிம்ஹவக்த்ரச்ச தைத்ய : |
மமாந்தர்ஹ்ருதிஸ்தம் மன : க்லேசமேகம்
ந ஹம்ஸி ப்ரபோ கிம் கரோமி க்வயாமி || 23

அஹம் ஸர்வதா துக்கபாரா வஸந்நோ
பவான் தீனபந்து ஸ்த்வதன்யம் நயாசே |
பவத்பக்தி ரோதம் ஸ்தா க்லுப்தபாதம்
மமாதிம் த்ருதம் நாசயோமா ஸுதத்வம் || 24

அபஸ்மார குஷ்டக்ஷயார்ச : ப்ரமேஹ
ஜ்வரோன்மாத குல்மாதிரோகா மஹாந்த : |
பிசாசாச்ச ஸர்வே பவத் பத்ர பூதிம்
விலோக்ய க்ஷணாத் தாரகாரே த்ரவந்தே || 25

த்ருசி ஸ்கந்த மூர்த்தி : ச்ருதௌ ஸ்கந்தகீர்திர் :
முகே மே பவித்ரம் ஸதா தச்சரித்ரம் |
கரே தஸ்ய க்ருத்யம் வபுஸ்தஸ்ய ப்ருத்யம்
குஹே ஸந்து லீனா மமாசேஷபாவா : || 26

முனீனா முதாஹோ நருணம் பத்தி பாஜா
மபீஷ்டப்ரதா : ஸந்தி ஸர்வத்ர தேவா : |
ந்ருணாமாந்த்யஜாநாமபி ஸ்வார்த்ததானே
குஹாத்தேவமன்யம் ந ஜானே நஜானே || 27

களத்ரம் ஸுதா பந்துவர்க : பசுர்வா
நரோவாத நாரீ க்ருஹே யே மதீயா : |
யஜந்தோ நமந்த : ஸ்துவந்தோ பவந்தம்
ஸ்மரன் தச்சதே ஸந்து ஸர்வே குமார || 28

ம்ருகா : பக்ஷிணோ தம்சகா யே சதுஷ்டா :
ததா வ்யாதயோ பாதகா யே மதங்கே |
பவச்சக்தி தீக்ஷ்ணாக்ர பின்னா : ஸுதூரே
விநச்யந்து தே சூர்ணித க்ரௌஞ்ச சைல || 29



ஜநித்ரீ பிதாச ஸ்வபுத்ரா பராதம்
ஸஹேதே நகிம் தேவசேனாதி நாத |
அஹம் சாதிபாலோ பவான் லோக தாத :
க்ஷமஸ்வாபராதம் ஸமஸ்தம் மஹேச || 30

நம : கேகினே சக்தயே சாபி துப்யம்
நமச்சாக துப்யம் நம : குக்குடாய |
நம : ஸிந்தவே ஸிந்து தேசாய துப்யம்
புன : ஸ்கந்த மூர்த்தே நமஸ்தே நமோஸ்து || 31

ஜயாநந்த பூமஞ் ஜயாபாரதாம—
ஜ்ஜயாமோக கீர்த்தே ஜயாநந்த மூர்த்தே |
ஜயாநந்த ஸிந்தோ ஜயாசேஷபந்தோ
ஜயத்தவம் ஸதாமுக்திதானே சஸுனோ || 32

புஜங்காக்யவ்ருத்தேன க்லுப்தம் ஸ்தவம் ய :
படேத் பக்தியுக்தோ குஹம் ஸம்ப்ரணம்ய |
ஸபுத்ரான் களத்ரம் தனம் தீர்கமாயுர்
லபேத் ஸ்கந்தஸாயுஜ்யமந்தே நர:ஸ : || 33

ශ්‍රී ආදි සඞ්ගරර් රචිත

# සුබ්‍රමණිය භුජඞ්ගම්

1. සද බාලරූපාපි විඝ්නාද්‍රි හන්ත්‍රි
මහාතන්තිවක්ත්‍රාපි පඤ්චාශ්‍යමාන්‍යා
විදීන් ත්‍රා දිම්රුක්‍යා ගණේශාභිතාමෙ
විදත්තාම් ශ්‍රියම් කාපි කල්‍යාණමූර්ති.

2. න ජානාමි සප්තම් න ජානාමි සාර්ත්තම්
න ජානාමි පත්‍යම් න ජානාමි කත්‍යම්
සිදේකා ෂඩාශ්‍යා හෘදි ද්‍යොතමානෙ
මුඛාත් නිශ්ශරන්දේ ගිරශ්චාපි චිත්‍රම්.

3. මයූරාදිරූඩම් මහාවාක්‍ය ගූඪම්
මනෝහාරි දේහම් මහච්චිත්ත ගේහම්
මහීදේව දේවම් මහාවේද භාවම්
මහාදේව බාලම් භජේ ලෝකපාලම්.

4. යථා සන්නිදානම් කතාමානවා මේ
භවාම් බෝධිපාරම් කතාස්තේ තදේව!
ඉති ව්‍යඤ්ජයං සින්ධුතීරේය ආස්තේ
තමීඩේ පවිත්‍රම් පරාශක්ති පුත්‍රම්.

5. යථාබ්දේශ්තරඞ්ගා ලයම් යාන්දිතුඞ්ගා
තතෛවා පද: ශන්නිදච් සේවදම් මේ
ඉතීවෝර්මපඞ්ක්තීර් නෘණාම් දර්ශයන්තම්
සද භාවයේ හෘත්සරෝජේ ගුහම් තම්.

6. ගිරෞමන් නිවාසේ නරා යේ තිරූඩා
තථා පර්වතේ රාජතේ දේතිරූඩා
ඉතීවජ් ෂෘවන් ගන්ධශෛලාධිරූඩා
සදේවෝ මුදේමේසද ෂන්මුඛෝස්තු.

7. මහාම් බෝධිතීරෙ මහා පාපචෝරේ
මුනීන්ද්‍රානුකූලේ සුගන්ධාඛ්‍යශෛලේ!
ගුහායාම් වසන්තම් ස්වභාසා වසන්තම්
ජනාර්තිම් හරන්තම් ශ්‍රයාමෝ ගුහම් තම්!



8. ලසත්වර්ණගේහේ නෘණාම් කාමදෝහේ
සුමස්තෝම සඤ්ඡන්න මාණික්‍ය මංචේ
සමුත්‍යත් සහශ්‍රාර්ක තුල්‍ය ප්‍රකාශම්
සදාභාවයේ කාර්තිකේයම් සුරේශම්.

9. රණත් හංසකේ මඤ්ජුලේත්‍යන්ත ශෝණේ
මනෝහාරි ලාවණ්‍ය පියූෂ පූර්ණේ
මනස්ෂට්පදෝ මේ භවක්ලේශ තප්ත
සදා මෝදතාම් ස්කන්ධ තෙ පාදපත්මේ.

10. සුවර්ණාභදිව්‍යාම්බරෛර් භාසමානාම්
ක්වණත් කිඞ්කිණී මේකලා ශෝභමානාම්
ලසත්හේම පට්ටේන විද්‍යෝතමානාම්
කටිම්භාවයේ ස්කන්ද තෙ දීප්‍යමානාම්.

11. පුලින්දේශ කන්‍යාඝන ආභෝග තුංග
ස්තනාලිඞ්ග නාශක්ත කාශ්මීර රාගම්
නමස්‍යාම්යහම් තාරකාරේ තවෝරඃ
ස්ව භක්තාවනේ සර්වද සානුරාගම්.

12. විධෞ ක්ලුප්ත තන්ඩාන් සවලීලාත්‍තාණ්ඩාන්
නිරශ්තේ පසුණ්ඩාන් ද්විෂත්කාලදණ්ඩාන්
හතේන්ද්‍රාරිෂණ්ඩාන් ජගත්‍රාන ශෞණ්ඩාන්
සදාතේ ප්‍රසන්ඩාන් ශ්‍රයේ බාහුදන්ඩාන්.

11. සදා ශාරදාඃ ෂන්මුරුහාඞ්ගා යති ශ්චූඃ
සමුත්‍යන්ත ඒව ස්තිතාච්චේත් සමන්තාත්
සදා පූර්ණබිම්බා කලඞ්කෛශ්ච හීනාඃ
තථා ත්වන්මුඛානාම් ඛ්‍රවෙ ස්කන්ද සාම්‍යම්.

14. ස්ඵුරන්මන්ද හාසාඃ සහම්සාණි සංජත්
කටාක්ෂාවලීජ්රුඞ්ග සංකෝප් ජ්වලාණි
සුධාස්‍යන්ති බිම්බාධරාණි සසූනෝ
තවා ලෝකයේ ෂන්මුඛාම් පෝරුහාණි.

15. විශාලේෂු කර්ණාන්ත තීර්ඝේෂ් වජශ්‍රම්
දයාශ්‍යන්තිසුද් වාදශස් වීක්ෂණේෂු
මයීෂත් කටාක්ෂඃ ශක්තාත් පාදිතශ් ශේත්
භවේතෙ දයාශීල කා නාමහාණිඃ

16. සුදාඬකෝත් භවෝ මේශි ජීවේති ෂට්තා
ජෙපම්මන්ත්‍රාමීසෝ මුදා ජිහ්රදේ යත්
ජගත් පාරප්පෘතප්යෝ ජගත්නාද තේජ්යඃ
ත්‍රිධෝජ් ජ්වලේප්යෝ නමෝ මස්තකේජ්යඃ

17. ඉභායාගි වත්සේදි භස්තාත් ප්‍රශාර්යා
හ්වයන්යාධරාස්සඞ්ගරේ මාතුරංගාත්
සමුත්පත්‍ය තාදම් සරයන්තම් කුමාරම්
හරාස්විෂ්ටසාන්රම් භජේ බාලමූර්තිම්.

18. ස්පුරත් රත්න කේයූරහාරභිරාම —
ශ්සලත් කුණ්ඩල ශ්‍රීලසත් කණ්ඩපාකඃ
කඩෘ පීතවාෂඃ කරේ කාරුශක්තිඃ
පුරස්තාත් මමාස්තාම් පුරාරේස් තනූජඃ

19. කුමාරේ සගුණෝ කුහ ස්කන්ද සේනා—
පදේ ශක්තිපාණෝ මයූරාතිරූඪ
පුලින්දාත් මජාකාන්ත භක්තාර් තිහාරින්
ප්‍රභෝ තාරකාරේ සදා රක්ෂමාම් ත්වම්.

20. ප්‍රසාන් තේන්ද්‍රියේ නෂ්ට සමක්ෂේද් විශෙෂ්ධෙ
කපෝත්කාරි වකේත්‍ර පයෝත්කම් බිහාත්රේ
ප්‍රයාණෝන්මුකේ මයියනාදේ තථාහිම්
තෘතම් මේ නයාලෝ භවාග්‍රෙ කුහත්වම්.

21. කෘතාන්තශ්‍ය ධූතේෂු සණ්ඩේෂු කෝපාත්
තහස්සින්දි පින්තිදි මාම් තර්ජයන්ශු
මයූරම් සමාරුභ්‍ය මා පෛපිති ත්වම්
පුර ඃ ශක්ති පානිර් මමායාහි සීඝ්‍රම්

22. ප්‍රණම්‍යා ශක්තෘත් පාදයෝස්තේ පදිත්වා
ප්‍රසාත්‍යප්‍රභෝප් ප්‍රාර්ත්නයෙණේක වාරම්
නවක්තුම් ක්ෂමෝහම් තදානීම් කෘපාප්තේ
නකාර්යාන්තකාලේ මනාහප්‍යුපේක්ෂා.



23. සහස්‍රාණ්ඩ පෝක්තාත් ත්වයාපූරනාමා
හදස්තාරකඃ සිංහ වක්ත්‍රශ්‍ය නෛතාඃ
මමාන්තර්භෘදිස්තම් මන ක්ලෙශ මේහම්
න හම්සිප්‍රපෝහිම් කරෝමි ක්වයාමි

24. අහං සර්ව්දා දුක්බපාරාවශන්නෝ
භවාන් ධීන බන්දු ස්ප්වතන්‍යම් නයාසේ
ශවත්ශක්ති රෝදම් සදා ක්ලුප්ත පාදම්
මමාධිම් තෘතම් නාසයෝමා සුදත්වම්

25. අපස්මාර කුෂධ ක්ෂයාර්සඃ ප්‍රමේහ
ජ්වරෝන්මාද කුන්මාදිරෝගා මහාන්තඃ
පිසාසාස්ස්‍ය සර්වේ භවත් පත්‍ර පූදිම්
විලෝක්‍ය ක්ෂණාත් තාරකාරෙ ත්‍රවන්තේ

26. දෘගි ස්කන්ධ මූර්තිඃ ශ්‍රුතෞ ස්කන්ධ කීර්තිඃ
මුඛෙ මේ පවිත්‍රම් සදා තච්චරිත්‍රම්
කරේ තස්‍ය කෘත්‍යම් වපුස්තස්‍ය භෘත්යම්
කුහේ සන්ද්‍ර ලීනා මමාශෙෂ භාවාඃ

27. මුනීනා මුදාහෝන් නෘණාම් භක්තිපාජා
මභීෂ්ටප්‍රදාඃ සන්දි සර්ත්‍ර දේවාඃ
නෘණාමන්ත්‍යජානාමහි ස්වාර්ථතානෝ
කුහාත් දෛවම්ණ්‍යම් න ජානේ නජානේ

28. කලත්‍රම් සුදා බන්ධුවර්ගඃ පසූර්වා
නරෝවාද නාරි ගෘහේ යේ මදීයාඃ
යජන්තො නමන්ඃ ස්තුවන්තෝ පවන්දම්
ස්මරන් තස්‍යදේ ෂන්ද්‍ර සර්වෙ කුමාර

29. මෘගාඃ ප ක්ෂිනෝ තම්සකා යේ සදුෂ්ටාඃ
තථා ව්‍යාධයෝ පාදකා යේ මදඞ්ගේ
පවශ් ශක්ති තීක්ෂණාග්‍ර පින්නාඃ සුතුරේ
විනශ්‍යන්තු තෙ සූර්ණිත ක්‍රෞඤ්ජ ශෛල

30. ජනිත්‍රී පිතාච ස්වපුත්‍රා පරාදම්
සහේතේ නකිම් දේවසේනාධි නාථ
අහං යාදිභාවෝ භවාන් ලෝක තාතඃ
ක්ෂමස්වාපරාතම් සමස්තම් මහේෂ

31. නමඃ කේකිනේ ශක්තයේ චාපි තුභ්‍යම්
නමශ්ඡාග තුභ්‍යම් නමඃ කුක්කුටාය
නමඃ සින්ධවේ සින්ධු දේශාය තුභ්‍යම්
පුනඃ ස්කන්ද මූර්තේ නමස්තේ නමෝ'ස්තු

32. ජයානන්ද භූමන් ජයාපාරධාමන්
ජයාමෝඝ කීර්තේ ජයානන්දේ මූර්තේ
ජයානන්ද සින්ධෝ ජයාශෙෂ බන්ධෝ
ජයත්තවම් සදා මුක්තිදානේ සසූනෝ

33. භුජංගාඛ්‍යවෘත්තේන ක්ලෘප්තම් ස්තවම් යඃ
පඨේත් භක්තියුක්තෝ ගුහම් සම්ප්‍රණම්‍ය
සපුත්‍රාන් කලත්‍රම් ධනම් දීර්ඝමායුර්
ලභෙත් ස්කන්ද සායුජ්‍යමන්තේ නරස්සඃ



உ

## கோளறு பதிகம்

சைவ சமயத்தவர் சிவபெருமானையே முழுமுதற் தெய்வமாகக் கொண்டு தொன்றுதொட்டு வழிபட்டு வருபவர்கள். சிவபெருமானை வழிபடுபவர்கள் நாள், கோள், பேய், பிசாசு, நோய், பகை, விலங்கு முதலிய ஒன்றுக்கும் அஞ்சார்கள். அப்படி இருக்கவும் அஞ்ஞானத் தாலும், தெய்வீக வழிபாட்டில் உறுதியின்மையினாலும், மனப் பெலவீனத்தினாலும் நலிவடையும் மக்கள் மீது கருணை கொண்ட திருஞானசம்பந்தப் பெருமான் திருமறைக்காட்டினின்றும் திரு மதுரைக்குப் புறப்படும் பொழுது திருநாவுக்கரசு நாயனார் நாள் கோள் நன்றாயில்லையென்று தடுத்த வேளையில் கோளறு பதிகம் என்னும் இத் திருப்பதிகங்களைப் பாடியருளினார். இங்ஙனம் நிகழ்ந் தது திருவருட் செயலேயாகும். இது இன்று வாழும் மக்களுக்காகவே நிகழ்த்த தெனலாம்.

பரமேஸ்வரனுக்கு மேற்பட்ட தெய்வமில்லை. மற்றெல்லாச் சக்தி களும் அவர் ஏவல் வழி நிற்கும். ஆகவே அவரையே முதன்மையாக வைத்து அருளப்பட்ட இத்திருப்பதிகத்தை ஓதி வந்தால் கிரக, கோள யோக தோஷம் நம் அணுவளவையும் தீண்டாமல் இருக்குமென்பதில் சந்தேகமில்லை. இத்திருப்பதிகங்களைத் தினமும் தனித்தோ அன்றிப் பலருடனும் ஒன்று கூடியோ ஓதிக் கோளயோகதோஷத்தை நிவிர்த்தி செய்து சுகம் பெறுவார்களாக. ஆண்டவனை அன்புடன் நினைந்து நீறணிந்து இதனைப் பாடித் தொழுதுஅவரவர் கடமைகளில் ஈடுபடுவார்களேயானால் நாளும் கோளும் பகைவர் முதலாயினோரும் துணையாவரேயல்லாமல் தீங்கு செய்யார். உலகமனைத்தும் அமைதியும் சாந்தியும் நிலவுவதாக.

**ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.**

உ

திருச்சிற்றம்பலம்

கோளறு பதிகம்

திருஞானசம்பந்தர் அருளியது

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந் தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என் பொடு கொம்பொடாமை இவை மார்பிலங்க
எரு தேறி ஏழையுடனே
பொன் பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்ப தொடொன்றோ டேழு பதினெட்டோ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன் பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவழ மேனி ஒளி நீறணிந்து
உமை யோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந் தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதி நுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதி யொடு கொன்றைமாலை முடிமேலணிந் தென்
உளமே புகுந்த அதனால்
கொதி யுறு காலன் அங்கி நமனொடு தூதர்
கொடு நோய்களான பலவும்
அதி குணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந் தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமி டியும்மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி அதளதாடை வரி கோவணத்தார்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடிவந் தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

செப்பிள முலைநன் மங்கை ஒருபாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய் தன்று விடைமேலிருந்து
மடவாள் தனோடு முடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடிவந் தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

புல பல வேடமாகும் பரன் நாரி பாகன்
  பசு வேறும் எங்கள் பரமன
சல மகளோ டெருக்கு முடிமேலணிந் தென்
  உளமே புகுந்த அதனால்
மலர் மிசையோனும் மாலும் மறையோடு தேவர்
  வருகால மான பலவும்
அலை கடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
  அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
  குணமாய வேட விகிர்தன
மத்தமும் மதியும் நாகம் முடிமேலணிந் தென்
  உளமே புகுந்த அதனால்
புத்தரோ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
  திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
  அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில் கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
  வளர் செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
  மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரைவந்து
  நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலைஓதும் அடியார்கள் வானில்
  அரசாள்வர் ஆணை நமதே.

திருசிற்றம்பலம்.



## எட்டாந்திருமுறை — மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிய

### திருவாசகம்

இராகம்—மோகனம் (சுத்தாங்கமாகப் பாடவேண்டியது)

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துஉன் விரையார் கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றிசயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக்கண்டு கொள்ளே.

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதும்இலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை செய்வதொன் றறியேனே.

இன்றெனக் கருளி இருள்கடிந்து உள்ளத்து
  எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின்தன்மை நினைப்பற நினைந்தேன்
  நீயலாற் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாந்
  திருப்பெருந் துறைஉறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை
  யாருன்னை அறியகிற் பாரே.

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்து ஈசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனை
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

## ஒன்பதாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

### திருவிசைப்பா — திருமாளிகைத் தேவர் பாடியது

இராகம் – ஆனந்தபைரவி

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
 உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
 சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
 அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
 தொண்டனேன் விளம்புமா விளம்பே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
 கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
 மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
 திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
 குளிரஎன் கண் குளிர்ந்தனவே.





மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
 வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
 புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
 அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
 பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
 தூய்மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
 சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேருவிடங்கன்
 விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
 பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
 மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
 சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம்

## பன்னிரண்டாந் திருமுறை

பெரியபுராணம்—சேக்கிழார் சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

இராகம்—மத்தியமாவதி

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிக மேயாக
இந்துவாழ் சடையானாடும் ஆனந்த எல்லையில்
தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்



## அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

இராகம்—தேஷ் தாளம்—ஆதி

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமதான சற்குணர் நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

இராகம்—சக்ரவாகம் தாளம்—கண்டசாப்பு

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்தருட் பெறுவேனோ
இபமா முகன்தனக் கிளையோனே
இமவான் மடந்தை உத்தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவா வினன்குடிப் பெருமாளே.

இராகம்—சுபபந்துவராளி தாளம்—கண்டசாப்பு

எதிரிலாத பத்தி தனைமேவி
இனியதாள் நினைப்பை இருபோதும்
இதய வாரிதிக்குள் உறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிரகாம வெற்பில் உறைவோனே
கனக மேருவொத்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே
வழுதிகூன் நிமிர்த்த பெருமாளே

உ

சிவமயம

திருச்சிற்றம்பலம்

# அநுராதபுரக்
# கதிரேசன் கோவில் பதிகம்

காப்பு

அரிய கதிரேசன் அரும்பதிக மோதிடுவோர்
பெரிய பேறடைந்து பெருமையாய் வாழ்ந்திடுவர்
கரிய தும்பிக்கைக் களிற்றான் தன்னருளால்
பிரிய மனைமக்கள் பிறரோடும் மகிழ்ந்தே.

பதிகம்

(1) சரவணத் துதித்த அந்தச்
சண்முகப் பெருமாள் றன்னைச்
சிரவணக் கஞ்செய் தேத்தித்
திருப்தியுஞ் சீருங் கொள்வோம்
அரசனைப் பதனைச் செய்யும்
அநுராத புரத்தி லென்னைக்
கரவனைப் பாக்கு வாருங்
கதிரேசக் காத லோனே.

(2) காதலால் யானுஞ் சென்று
கந்தனைக் கண்ணாற் கண்டேன்
ஏதமின் றியன்ற சீரார்ந்
தெழிலுறு கோவில் தன்னில்
சாதலாந் துன்ப மில்லைச்
சந்ததம் சுகமே யுண்டு
ஆதலா லனைவ ருஞ்சென்
றநுரனை வழுத்து வோமே.



(3) வழுத்துவோம் வாழ்வு வேண்டி
வடக்கிருந் திடுவான் றன்னை
எழுத்திலே வடிக்கின் றேனே
எந்தனின் மாட்சி தன்னைப்
பழுத்தநற் பழம் நீ யென்ற
பான்மையாம் பாலன் முன்னே
அழுத்தியே அசுரன் தன்னை
அடர்த்தருள் செய்த தேவே.

(4) தேவுதன் தெய்வத் தன்மை
தேர்ந்திடா என்னை யின்று
மேவுதன் கோவி லுக்கு
விருப்பொடு மீர்த்து வந்தே
சேவகஞ் செய்வா யென்று
திருவழி காட்டி என்பாற்
பாவுகந் தருளும் எந்தை
பகர்திரு வடிகள் போற்றி

(5) திருவடி மறவேன் ஐயா
திருவருள் வழியில் வாழும்
ஒருவர மருளு வீரேல்
உள்ளமும் உணர்வும் ஒன்றும்
பெருநிலை தானே சேரும்
பிஞ்ஞகா பேதை யேற்கும்
அருளுருக் காட்சி தந்த
அநுரையி லமர்ந்த கோவே.

(6) கோவேயென் றென்று முன்றனை
கோலத்தைக் காட்டுவாயேல்
சாவேவ ராதா மென்று
சாகின்றேன் சாட்சி யில்லை
பாவாரஞ் சூட்டி யன்பாற்
பரவுத லறியேன் ஐயா
நாவீறிங் கிருந்து மென்ன
நமனிடம் ஏகின் றேனே.

(7) நமனிட மேகு நாளில்
நாமேது செய்கின் றேமால்
எமதுநா னென்ப வற்றை
எறிவதுஞ் செய்வோம் வானம்
கமழிகு நிலையில் நாளுங்
கார்முகில் கதுவி வண்டர்
அமர்பொழில் சூழு மாநு
ரநுரையிற் கந்த வேளே.

(8) கந்தவே ளுனது பாதங்
கருத்திலே வைத்தே னையா
வந்தனை வழிபா டாற்றி
வாழ்ந்திடு மக்கள் தம்மைச்
சிந்தனை செயல் சொல் யாவும்
சிறந்திட நல்வாழ் வீந்தே
அந்தமி லமர வாழ்வை
யளித்திடு மநுரை வேலே

(9) வேலனே விக்கி னங்கள்
வினைகளை விடுவிப் பாயே
ஞாலம் பொல் லாங்கு நீங்கி
நலம்மிகக் காத்தி டாயே
சீலமார் தமிழ் முன் போலத்
திகழ்ந்திட அருள்செய் வாயே
மாலவன் மருகா கந்தா
வரந்தரு மநுரை வாழ்வே.

(10) வரமது தருவாய் போற்றி
வானவ ரேறே போற்றி
காஞ்சிரங் குளித்தேன் போற்றி
கார்த்திகைத் தீபா போற்றி
புரமிசை யிருப்பாய் போற்றி
புனிதனே குமரா போற்றி
அரனருள் சரவணத் தோய்
அநுரையாய் போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.



# அநுராதபுரம் கதிரேசன் கோவில் வரலாறும் கும்பாபிஷேக விபரமும்

## ஆதிக் கதிரேசன் ஆலயம்

தமிழர், சிங்களவர் ஆகியோர்களின் தலைநகரமாக மிளிர்ந்த அநுராதபுரம், சோழரின் 2-ம் படையெடுப்பின் பின்னர் ஓர் பாழடைந்த நகரமாக காடுகளாலும் கொடிய வன மிருகங்களாலும் சூழப்பட்டு இருந்தது. இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டதும் திரும்பவும் நகரமாக்கப்பட்டது. இந்நாளில் "சேர் கென்றிவார்ட்" என்பவரின் ஆட்சிக்குட்பட்டதும் விவசாயிகளுக்கு நற்பலன் ஏற்பட்டு குடியிருப்புக்கள் ஏற்பட்டன. 19 ம் நூற்றாண்டின் இறுதியில் ஏராளமான தமிழ் மக்கள் வசித்துவரலாயினர். ஒரு கதிரேசன் ஆலயம் அவர்களின் வழிபாட்டுக்கெனத் தோன்றியது. இதன் பூர்வீக வரலாற்றைக் கூறப்புகின் பலரும் பலவிதமாகக் கூறுகின்றனர்.

முருக பக்தராய தென்னிந்தியத் துறவி ஒருவர் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மேல்நிலை அடைந்த அநுராதபுரத்தை அடைந்து தற்போது பழைய நகராகத் திகழும் புனித அநுராதபுரத்தின உம்மா பள்ளிவாசலுக்கு அண்மையில் ஒரு சிறுகொட்டில் அமைத்து வேலையும், சுப்பிரமணிய யந்திரத்தையும் வைத்து பூசித்தார். தான் செல்லுமிடமெல்லாம் கொண்டு செல்லும் வேலையும் இயந்திரத்தகட்டையும் எடுக்க முனைந்த போது வேல்பகவான் சொப்பனத்தில் தோன்றி எடுக்கவிடாது செய்தமையால் அதை எடுக்காதுவிட்டுச் சென்று விட்டார். பின் அந்நகரப் பெருமக்கள் வழிபட்டுவரலாயினர்.

இதன் பின்னர் சுற்றுடலும் சூழ்நிலையும் சரியின்மையால் அந்நாளில் வாழ்ந்த சைவச்சீலர்கள் ஒன்று சேர்ந்து, இருந்த இடத்தில் இருந்து சிறிது தூரத்திற்கப்பால் தற்போது பழைய நகராகவிருக்கும் அநுராதபுரத்திலுள்ள ஸ்நாநகுளத்துக்கண்மையில் பிரதிட்டைசெய்யப்பட்டது. இதுவே ஆதிக் கதிரேசன் ஆலயமாகும்.

## மாவடி முருகன்

பின்னரும் இடவசதியின்மையால் சைவச் சீலர்களான எஸ். சரவணமுத்து துன்னாலைச் செல்லையா, ச. சிற்றம்பலம் தி. முருகேசம்பிள்ளை, சி. ந. சிற்றம்பலம், வழக்கறிஞர் ராமசாமி, வழக்கறிஞர் சிவக்கொழுந்து போன்ற பெரியார்களும் பொதுமக்களும் ஒன்று சேர்ந்து பழையபடி அநுராதபுரத்திலுள்ள மாவடி என்னும் இடத்தில் சுமார் இரு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணியொன்றைத் தரும

சாதனமாகப் பெற்று 1927 ம் ஆண்டு திருப்பணி வேலையை ஆரம்பித்து 1930 ம் ஆண்டு திருப்பணியை முடித்தனர். பின்னர் கடந்த பிரமோதூத வருடம் வைகாசிமாதம் அசுவினி நட்சத்திரத்தில் ஆகம முறைப்படி மகாகும்பாபிஷேகத்தைச் செய்தனர். 1955 ம் ஆண்டு யந்திரங்கள் களவாடப்பட்டமையால் அம்மூர்த்தியை மறுபடியும் அங்கேயே கும்பாபிஷகம் செய்தனர்.

**புதிய கதிரேசன் கோவில்**

1942 ம் ஆண்டு அநுராதபுரத்தை புனித நகராக்க வேண்டும் என்று பௌத்தர்கள் கிளர்ச்சி செய்தமையால் 1961 ம் ஆண்டு அரசாங்கம் இதற்கென ஓர் பாதுகாப்புச் சபை நிறுவியது. இதன் விளைவாகப் பௌத்த கோவில் அல்லாத எனைய கோவில்கள் இங்கு இருக்தப்படாது என்று சட்டம் வந்தது. ஆகவே 1962 ம் ஆண்டு 31 ந் திகதிக்கு முன் இக்கோவில் அப்புறப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக புதிய நகரில் ஜெயந்தி மாவத்த வீதி சந்திக்கும் இடத்தில் நான்கு ஏக்கர் நிலத்தில் புதிய அத்திவாரக்கல் சேர் கந்தையா வைத்தியநாதன், திரு. எஸ். மணி ஆகியோரால் 1962 ம் ஆண்டு ஜூலை மாதம் 4ந் திகதி நண்பகல் சுபவேளையில் நாட்டப்பட்டது.

இவ்வாலயத்துக்கு திருவாளர்கள் நடாராசா (தலைவர்). சி.கந்தசாமி (செயலாளர்), சதாசிவம்பிள்ளை (பொருளாளர்), சிவராமலிங்கம், கந்தசாமிசுப்பையா, நல்லைநாதன், பரஞ்சோதி, சேனாதிராசா ஆகியோர் அங்கத்தவராகப் பணியாற்றுகின்றனர். புதிய கதிரேசன் திருப்பணிக்கு திரு.நடராசாவைத் தலைவராகக் கொண்ட 7 பேர் அடங்கிய கமிட்டியிடம் பொறுப்பு விடப்பட்டுள்ளது.

அரசாங்கம் கோவிலுக்கென 105,000 ரூபாவைக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு 73,000 ரூபாயைக் கொடுத்துதவியது. மீதிப்பணம் வருட இறுதியில் தருவதாக ஒப்புக்கொண்டது. தற்போது இக்கோவில் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

முன்னோரால் பூசிக்கப்பட்ட கதிரேசனையும் இயந்திரத் தகடுகளையும் பரிவார மூர்த்திகளையும் தற்காலிகமாக முன்னரேயே புதிய கதிரேசன் கோவில் மகா மண்டபத்தில் பால ஸ்தாபனம் செய்யப்பட்டு இருக்கின்றது.

வேதசிவாகம விதிப்படி திரு. தங்கவேலு ஆசாரியால் புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட வள்ளி தெய்வநாயகி சமேத முத்துக்குமாரசாமியை மூலஸ்தானத்திலும், பரிவார



மூர்த்திகளாய விநாயகர், நடராஜர், வைரவர் நவக்கிரகம் முதலிய மூர்த்திகளை அவரவர்களுக்கென அமைக்கப்பட்ட ஆலயத்திலும் பிரதிஷ்டை செய்து குரோதி வருடம் ஆனி மாதம் 25ம் திகதி (9.9.1964) புதன்கிழமை காலை 6 மணி 34 நிமிடம், தொடக்கமுள்ள கன்னி லக்கின சுபவேளையில் கலியுகவரதன் திருவருள் முன்னிற்க குடமுழுக்கு நடந்தேறியது. இக்கும்பாபிஷேகத்தை அச்சுவேலி சிவ ஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் நடாத்தி வைத்தார்கள்.

**கிரியா விபரம்**

23 ம் திகதி (7.9.64) திங்கட்கிழமை காலை 7 மணி நயனோன்மீலனம், காலை 8 மணி தொடக்கம் கிராமப் பிரதட்சிணம் ஜலாதிவாசம் நவவிக்கிரக ஹோமம், திசாஹோமம், தூபிகலசஸ்தாபனம், வாஸ்துசாந்தி மாலை 5 மணி தொடக்கம் மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம் கலாகர்ஷணம், கும்பஹோமம், யாகபூசை, சயனாரோகணம்.

24 ந் திகதி செவ்வாய் (8.9.64) காலை 9 மணி தொடக்கம் யாக பூசை அட்டபந்தனம்.

மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை தைலாப்பியங்கம், பிம் பசுத்தி நியாசங்கள் ஸ்டாசாகுதி.

25 ஆம் திகதி (09.09.64) புதன் உதயம் 6.30—8 மணி மகா கும்பாபிஷேகம், பகல் 10.30 மகாகும்பாபிஷேகம், 1 மணி மகேசுவரபூசை.

### புனருத்தாரன மகா கும்பாபிஷேக விபரம் :

சகல புவனங்களையும் சிருஷ்டி, திதி, சம்கார, அனுக்கிரக, திரபவ அனுக்கிரகம் செய்தருளுகின்ற மகாபஞ்சகிருத்திய அனவரத திரு நிர்த்த தாண்டவம் செய்தருளுகின்ற ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானுடைய கிருபா கடாசத்தினலே குன்றுதோறும் குமரனுக்கு மூவிரு படைவீடுகள் சிறந்து விளங்கவும். சக்திபீடங்கள் தனிச்சிறப்புடன் திகழ்கின்றதுமாகிய பரதகண்டத்தின் தெட்சண பாகத் தில் அமைவதும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரால் சிறப்பித் துப் பாடப்பெற்றதும், வாரணம் பொருதமார்பும் வரையினை எடுத்த தோளும் நாரதமுனிவர்க்கு நயம்பட உரைத்த நாவும் மௌலி பத்தும், சங்கரன் கொடுத்த வாளுடன் இராவணன் இராசரிக்கம் செய்ததும் இராகு கேதுக்களால் தைப்பட்ட திருக்கேதீஸ்வரம்,

முனீச்சரம், தெட்சணகைலாயம் எனச் சிறந்து விளங்குகின்ற கோணே ஸ்வரமும், மற்றும் முனீஸ்வரம் நாகதீபம், கதிர்காமம், குறத்தி மணாளனுக குவலயத்தில் விளங்கும் நல்லூர்க் கந்தன் நல்லருள் சிறப்பும் திகழும் இலங்காபுரியில், வடமத்தியபால் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்தருளுகின்ற மலைமகளும், கலைமகளும்

திருமகளும் நடம்புரிகின்ற அனுராதபுரம் ஸ்ரீ கதிரேசப் பெருமானுக்கு நிகழும் ரௌத்திரி வருடம் சித்திரைத் திங்கள் 16 ம் (28.4.1980) திங்கட்கிழமை காலை 9.04 மணி தொடக்கம் 9.46 மணி வரையும் மிதுனலக்கினமும், கஸ்த நட்சத்திரமும், நயோகமும் பொருந்திய சுபமுகூர்த்தத்தில் குவயலமுய்யக் குடமுழுக்கு செய்ய அருள்பா லித்துள்ளது; அத்தருணம் அடியார் திரிகாணசுத்தியுடன் விரதநியம ஆசாரசீலர்களாகவந்து கதிரேசனை உபாசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்வீர்களாக.





6–ம் நாள் (18–04–1980) வெள்ளிக்கிழமை மாலை 6 மணி 20 மீஷமலவில் கர்மாரம்பம், விநயக வழிபாடு, ஆசார்ய வர்ணம், திரவிய

7 ம் நாள் (19.04.1980) சனிக்கிழமை மாலை கணபதி ஹோமம்.

8 ம் நாள் (20.04.1980) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யந்திர பூஜை, மாலை 8 மணிக்கு கிராமசாந்தி பிரவேசபலி

8 ம் நாள் (21.04.1980) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ரஷோக்ன ஹோமம், யந்திர பூஜை.

மாலை 8 மணிக்கு திசாஹோமம், சம்ஹிதா ஹோமம், மூர்த்தி ஹோமம்.

10 ம் நாள் (22.04.1980) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நவக்கிரக மகம், யந்திர பூஜை.
மாலை 8 மணிக்கு யாஸ்து சாந்தி.

11 ம் நாள் (23–04–1980) புதன்கிழமை காலை 10 மணக்கு நூர்தன மூர்த்திகள், கயனேன், மீலனம், கிராமப் பிரதக்ஷணம், யந்திர பூஜை. மாலை 8 மணிக்கு நான்யாதிவாசம், ஜலாதிவாசம்,

12 ம் நாள் (24.04.1980) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஆயுஷ் கர்மம், கங்கா பூஜை, ஆதித்தியாக்னி, சங்கிரஹணம், யந்திர பூஜை. மாலை 9 மணிக்கு விசேஷ சக்தி, மிருத்தங்கிரஹ ணம், அங்குரார்ப்பணம், ஆசார்ய ரக்ஷாபந்தனம், பிரசன்ன பூஜை, கடஸ்தாபனம்.

இரவு 9 மணிக்கு மேல் கலாகஷணம், யக்திரா ஹோமம் ஷண கும்பம் யாகசாலைப் பிரதேசம்,

12 ம் நாள் (25.04.1980) வெள்ளிக்கிழமை முற்பகல்
9.15 தொடக்கம் 10–45 வரையமுள்ள மிதுன லக்னத்தில்

13–ம் நாள் (25.04.1980) வெள்ளிக்கிழமை முற்பகல் சிற்பி சம்பா வனை 9.15 தொடக்கம் 10.45 வரையுமுள்ள மிதுன லக்னத்தில் கற்பகக்கிருக பதவின்நியாசரம், ஆதார விவாஸ்தாபனம், ஸ்தூபி ஸ்தாபனம், யந்திர ஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், சைதைப்பியங்கம், யாக பூஜை தீபாரதனை.

மாலை 8 மணிக்கு யாகபூஜை, தீபாராதனை

14 ம் நாள் (26.04.1980) சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாகபூஜை, தீபாராதனை, மாலை 7 மணிக்கு யாகபூஜை, தீபாராதனை.

15 ம் நாள் (27.04.1980) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாகபூஜை, தீபாராதனை, பிம்பசுத்தி, சதனஷ்டத்துவநியாசம், ரக்ஷ பந்தனம் மாலை 8 மணிக்கு யாகபூஜை, விசேஷ திரவிய ஹோமம், நூதனமூர்த்திகள் (சயனுரோகணம்), ஸ்பரிசாகுதி, தீபாராதனை.

16 ம் நாள் (28.04.1980) திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஸ்தூபி அபிஷேகம். 7 மணிக்கு மஹா பூரணுதி, தீபாரதனை.

அந்தர்ப்பலி, பெரிப்பலி, யாத்திராதானம், கும்பவீதிப் பிரதக்ஷ ணம், மூர்த்தி சம்போஜனம்.

முற்பகல் 9.40—9.26 வரை கும்பாபிஷேகம் நடைபெறும்.

## தசமங்கள தரிசனம்

நண்பகல் 12 மணிக்கு மஹா அபிஷேகம்.
மஹா அபிஷேகம் பூர்த்தியடைந்தபின், பிற்பகல் 1 மணிக்கு அன்னதானம்.

இரவு 8 மணிக்குத் திருக்கல்யாணம், தண்டிகை உற்சவம்.

ஸ்தான குருமார் : சிவஸ்ரீ பொ. இ. நடராஜா குருக்கள், ஸ்ரீ இ. ந. நமசிவாயம்

போதகாசாரியர் : சிவஸ்ரீ க. பொன்னையாக் குருக்கள், (வேதாரணிய ஆதீனம்)

சிஸ்டா பிரதமகுரு : சிவஸ்ரீ அ. நடராஜா குருக்கள்

குருமார்கள் : சிவஸ்ரீ க. தியாகராஜாக் குருக்கள், சிவஸ்ரீ பொ. ஐயாத்துரைக் குருக்கள்.

சிவஸ்ரீ கை. நமசிவாயக் குருக்கள், சிவஸ்ரீ வி. ச. சட்ட நாதக் குருக்கள்

சோதகாச்சாரியார் : ஸ்ரீ இ. ந. கேதீஸ்வரன், ஸ்ரீ ச. மகா லிங்கசிவம்

சிற்பவேலை : மார்க்கண்டு பன்னீர்ச் செல்வன் குழுவினர், அராலி தெற்கு



## வேதபாராயணமும் தேவபராயணமும் நடைபெறும்

**முக்கிய குறிப்பு :** இத்தினங்களில் குகநேயச் செல்வர்கள் அபி ஷேகத்திற்குத் தேவையான பால், இளநீர், பழவகைகள், அபி ஷேகத் திரவியங்கள், பூ முதலிய பொருட்களைக் கொண்டுவந்து கொடுத்து, கதிரேசனின் கருணைக் கடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

கும்பாபிஷேகம் திறம்பட நடைபெற, மெய்யன்பர்கள் ம. கணேச மூர்த்தி, 196, பண்டாரநாயக்க மாவத்த, அநுராதபுரம் என்ற முகவரிக்கு நிதி அனுப்பி உதவுமாறு கோரப்பெறுகின்றனர்.

இவ்வண்ணம் என்றும் சிவப்பணியில்

கந்தசாமி,
தலைவர்.

ம. கணேசமூர்த்தி
செயலாளர்.

சி. மு. கந்தசாமி,
பொருளாளரும், ஆலய முகாமையாளரும்.

**சுபம்.**

கும்பாபிஷேக பலன் :—

ஒருவன் புத்திபூர்வத்தால் நாள்தோறும் செய்யும் பாபம் சிவாலய தரிசனத்தாலும், நாள்தோறும் சிவாலய தரிசனத்தில் பிழைத்தால் உற்சவ தரிசனத்தினுலும், உற்சவ தரிசனத்தில் பிழைத்தால் மகா கும்பாவிஷேக தரிசனத்தாலும் தீரும்.

ஆகையால் எவ்வெவற்ருலும் தீராத சிவ அபராதங்களைத் தீர்க்கும் கும்பாபிஷேகத்தைப் பெரும் சாந்தி என்று பெரியோர் கூறுவர். இதனுல்தான் ஞானசம்பந்த பெருமான்,

" உரிஞ்சாய வாழ்க்கையமணுடையைப் போக்கும்
இருஞ்சாக்கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த காபலீச்சர மமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய் "

என்ருர்.

கும்பாபிடேக தரிசனத்தால் அடையும் போக மோட்சங்களோ, என்றும் ஒரு தன்மைத்தாய் நிலைபெறும் நித்தியானந்த மோட்சமாகும். கும்பாபிடேக தரிசனத்தால் யார் யார் எதையெதை விரும்புகிருர்களோ அதை அதைப் பெறுவர். தீவினை நீங்கி புத்திரப் பேறு முதலானவைகளையும் சிவபக்தியையும் பெற்று சிவானந்தம் பெறுவர் என்பது திண்ணம்.

T. Kanagarathnam,
B.A (Lond.) Dip-in-Ed.(Cey) 1st Class Trained
Consul… Hd. Editor - E. P. D - S. B. E. S
Lecturor; S…D… and BCIS
COLOMBO — SRI LANKA.





" நள்ளிருளில் நட்டம் பயின்ருடும் நாதன்
தில்லையுள் கூத்தன் "

—சிவபுராணம்

சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்று உண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையகத் துள்ளார்க்கு வகுத்து வைத்தானே.

திருமூலர் திருமந்திரம்




வெளியீடு

இலங்கை பிரதேச அபிவிருத்தி இந்து சமயத்
தமிழ் அலுவல் அமைச்சு, கொழும்பு.

ප්‍රකාශනය

ශ්‍රී ලංකාවේ ප්‍රාදේශීය සංවර්ධන, හින්දු සමය සහ දෙමළ
කටයුතු පිළිබඳ අමාත්‍යාංශය – කොළඹ.

PUBLICATION
Ministry of Regional Development
Hindu and Tamil Affairs,
Colombo - Sri Lanka.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.